*கவனிக்க.-2021.02.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான காலி-பலப்பிட்டி மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2217 - 2021 පෙබරවාරි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.02.25

*2217 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 426 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 434 |


**கவனிக்க.-** (i) வர்ள்ட் லய்ப் லய்ன் யோகா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, மாச்சு மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மாச்சு மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

423-B 82208-5,403 (2021/ 02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்கருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
## பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது:-

01. **பதவிப் பெயர் -முகாமையாளர் (போக்குவரத்து மற்றும் பராமரிப்பு)**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

01.1 **தகைமைகள்**

01.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, முகாமைத்துவம்/ வணிகவியல் ஆகிய பாடங்களில் ஏதேனுமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

02. **பதவிப் பெயர் - விஞ்ஞான அலுவலர்**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 06

02.1 **தகைமைகள்**

02.1.1. **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல் பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

03. **பதவிப் பெயர் - ஆலோசனை அலுவலர்**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02

03.1 **தகைமைகள்**

03.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/உளவியல்/குற்றவியல்/ சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

04. **பதவிப் பெயர் - சிகிச்சையளிப்பு மற்றும் ஆய்வு அலுவலர்**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

04.1 **தகைமைகள்**

04.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/உளவியல்/குற்றவியல்/ சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

05. **பதவிப் பெயர் - போதையூட்டும் ஔடத கல்வி மற்றும் தகவல் அலுவலர்**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

05.1 **தகைமைகள்**

05.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானங்கள் என்ற பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

06. **பதவிப் பெயர் - வெளிநிலைச் சேவை அலுவலர்**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

06.1 **தகைமைகள்**

06.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/உளவியல்/குற்றவியல்/சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

07. **பதவிப் பெயர் - ஆராய்ச்சி அலுவலர்**
சேவை வகுதி - "கனிஷ்ட முகாமையாளர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

07.1 **தகைமைகள்**

07.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/உளவியல்/குற்றவியல்/சமூக வேலை/புள்ளிவிவரவியல் ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் (மேற்படி 01, 02, 03, 04, 05, 06, 07 ஆகியவற்றின் கீழ் காணப்படும் பதவிகளுக்கு)

(பின்வரும் தகைமைகளில் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04)

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத சேவை வகுதியில் தரம் II க்குரிய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

3. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியில் தரம் II க்குரிய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

4. அமுலாக்கல்/செயற்பாட்டு/விரிவாக்கல் அலுவலர் சேவை வகுதிக்குரிய பதவியொன்றில் 08 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள வகுதி** - JM 1-1
**சம்பள அளவுத்திட்டம்** - (ரூபா 42,600 – 10 × 755 – 18 × 1,135 - ரூபா 70,580.00)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயதெல்லை.-** 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

08. **பதவிப் பெயர் - உதவி ஆலோசனை அலுவலர்**
சேவை வகுதி - "அமுலாக்கல்/செயற்பாட்டு/விரிவாக்கல் அலுவலர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 05

08.1 **தகைமைகள்**

08.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/உளவியல்/குற்றவியல்/சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

09. **பதவிப் பெயர் - உதவி ஆராய்ச்சி அலுவலர்**
சேவை வகுதி - "அமுலாக்கல்/செயற்பாட்டு/விரிவாக்கல் அலுவலர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02

09.1 **தகைமைகள்**

09.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ குற்றவியல்/ சமூக வேலை/புள்ளிவிவரவியல் ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

10. **பதவிப் பெயர் - உதவி வெளிநிலைச் சேவை அலுவலர்**
சேவை வகுதி - "அமுலாக்கல்/செயற்பாட்டு/விரிவாக்கல் அலுவலர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 06

10.1 **தகைமைகள்**

10.1.1 வெளிவாரி விண்ணப்பதாரர்கள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/உளவியல்/குற்றவியல்/சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

11. **பதவிப் பெயர் - உதவி விஞ்ஞான அலுவலர்**
சேவை வகுதி - "அமுலாக்கல்/செயற்பாட்டு/விரிவாக்கல் அலுவலர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 04

11.1 தகைமைகள்

11.1.1வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல் பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

12. **பதவிப் பெயர் - உதவி போதையூட்டும் ஔடத கல்வி மற்றும் தகவல் அலுவலர்**
சேவை வகுதி - "அமுலாக்கல்/செயற்பாட்டு/விரிவாக்கல் அலுவலர்"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

12.1 **தகைமைகள்**

12.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானங்கள் என்ற பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள் (மேற்படி 08, 09, 10, 11, 12 ஆகியவற்றின் கீழ் காணப்படும் பதவிகளுக்கு)

(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியில் தரம் II க்குரிய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள வகுதி** - MA 5-2

சம்பள அளவுத்திட்டம் - (ரூபா 36,850 – 10 × 755 – 15 × 930 – 5 × 1,135- ரூபா 64,025.00)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயதெல்லை** - 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

13. **பதவிப் பெயர் - ஆலோசனை உதவியாளர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 30

13.1 **தகைமைகள்**

13.1.1**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத ஒரு மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து ஆலோசனை/ சமூகவியல்/ குற்றவியல்/ உளவியல்/ சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

14. **பதவிப் பெயர் - வெளிநிலைச் சேவை உதவியாளர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 04

14.1 **தகைமைகள்**

14.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத ஒரு மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து ஆலோசனை/ சமூகவியல்/ குற்றவியல்/ உளவியல்/ சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

15. **பதவிப் பெயர் - போதையூட்டும் ஔடத கல்வி மற்றும் தகவல் உதவியாளர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

15.1 **தகைமைகள்**

15.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத ஒரு மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து சமூகவியல்/ குற்றவியல்/ உளவியல்/ சமூக வேலை/ தொடர்பாடல் ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

16. **பதவிப் பெயர் - ஆராய்ச்சி உதவியாளர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 06

16.1 **தகைமைகள்**

16.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத ஒரு மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து ஆலோசனை/ சமூகவியல்/ குற்றவியல்/ உளவியல்/ சமூக வேலை ஆகிய ஏதேனுமொரு பாடத்துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

17. **பதவிப் பெயர் - தாதி அலுவலர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 04

17.1 **தகைமைகள்**

17.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத ஒரு மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

18. **பதவிப் பெயர் - ஆய்வுகூட தொழில்நுட்பவலர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 04

18.1 **தகைமைகள்**

18.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத ஒரு மட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள்(மேற்படி 13, 14, 15, 16, 17, 18 ஆகியவற்றின் கீழ் காணப்படும் பதவிகளுக்கு)

மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் ஏற்புடைத்தாகும்.

**சம்பள வகுதி** – MA 2-1

**சம்பள அளவுத்திட்டம்** - (ரூபா 30,310 - 10 × 300- 7× 350 - 4 × 495- 20 × 660- ரூபா 50,940)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயதெல்லை** - 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

19. **பதவிப் பெயர் - முகாமைத்துவ உதவியாளர்**
சேவை வகுதி - "முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத"
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03

19.1 **தகைமைகள்**

19.1.1 **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்விசார் -**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்,

i. சிங்களம்/தமிழ்
ii. கணிதம்

ஆகியன உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(கணினி சொல் முறைவழியாக்கம் (Word Processing)/ தட்டச்சு பற்றிய மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் அல்லது வேறு அதற்கு நிகரான மட்டத்திலான திறன்கள்)

19.1.2 **உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முதனிலை தரம் - தொழில்நுட்பம் சாராத, பகுதியளவு தொழில்நுட்பம் சார்ந்த,தொழில்நுட்பம் சார்ந்த வகுதிகளில் கீழ்க்காணும் 'ஆ', 'இ', 'உ' இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்,

i. சிங்களம்/தமிழ்
ii. கணிதம்

ஆகியன உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(கணினி சொல் முறைவழியாக்கம் (Word Processing)/ தட்டச்சு பற்றிய மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் அல்லது வேறு அதற்கு நிகரான மட்டத்திலான திறன்கள்)

(இ) சேவையில் நிரந்தர நியமனம் வகிக்க வேண்டுமென்பதோடு, அந்நியமனங்களில் உறுதியாக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு உடன் முந்திய நிரந்தர நியமனமொன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான, திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** (I).- யாதேனுமொரு பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றிய அல்லது யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான ஒரு நிபந்தனையாக சேவையாற்றிய பயிற்சிக் காலப்பகுதி மேலே (உ) பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டு காலப்பகுதிக்கு கணிப்பிடப்பட மாட்டாது. யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/அமய சேவைக் காலப்பகுதிகள் மேலே 'ஆ' பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஐந்தாண்டு காலப்பகுதிக்கு கணிப்பிடப்படமாட்டாது.

**சம்பள வகுதி** –MA 1-1

**சம்பள அளவுத்திட்டம்** - (ரூபா 27,910- 10 × 300 - 7 × 350 - 4 × 495 - 20 × 660- ரூபா 48,540)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயதெல்லை**.- 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

**வேறு**: விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராகவும் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிப்பதற்கான மொழிமூலம்**

விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியில் மாத்திரம் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை.**- ஆட்சேர்ப்பு அதிகாரியினால் முடிபு செய்யப்படுகின்றவாறு எழுத்துமூல போட்டிப் பரீட்சை யொன்றின் அத்துடன்/அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**நியமனத்தின் தன்மை.**- நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் உரித்துடையது.

**விண்ணப்பக் கட்டணம்.**- வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500.00 தொகையை நாட்டின் எந்தவோர் இலங்கை வங்கிக் கிளையிலும் "தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை" என்ற பெயரில் இலங்கை வங்கியில் 1643 என்ற இலக்கத்தில் பேணப்படும் கணக்கில் காசு வைப்புச்செய்து, குறித்த வைப்புத்தொகைச் சீட்டின் (deposit slip) பிரதியொன்றை தங்கள் வசம் வைத்துக்கொண்டு அதன் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

உங்கள் தகவல்களை "A4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து, சபையின் இணையத் தளத்திலிருந்து (www.nddcb.gov.lk) பெறப்பட்ட மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி (கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு) சம்பந்தப்பட்ட சான்றிதழ் களின் பிரதிகளுடன் 2021.03.19ஆந்திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,383, கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அரச கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை தாபன/திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஒழுங்காகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும்,காசு வைப்புத்தொகைச் சீட்டின் மூலப் பிரதி இணைக்கப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பம் அல்லாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்பு சம்பந்தமாக சபையினால் எடுக்கப்படும் முடிவு, இறுதியானதாகும்.

தவிசாளர்,
தேசிய அபாயகர ஔடதங்கள்
கட்டுப்பாட்டுச் சபை.

383, கோட்டே வீதி,
இராஜகிரிய.
பதிப்பிக்கும் திகதி: 2021.02.25

02-746

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் இராஜாங்க அமைச்சு
## தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
## எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் - கட்டுநாயக்க

எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான எந்திரவியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல் - '2020/2021 குழு'

*கட்டுநாயக்கா, எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக எந்திரவியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்க கொள்கைசார் தீர்மானத்தின் படி இந்த பாடநெறியானது எதிர்காலத்தில் பட்டப் படிப்பாக மாற்றப்படுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பரீட்சையானது தேசிய தொழிற்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் நியமங்களுக்குக் கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021 யூன் மாத இறுதியில் நடைபெறும்.*

*பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். இச் சட்டவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுகின்றவர்கள் அனைவரும் ஆளாவார்கள்.*

1. **தகைமை**.-

1.1 **கல்வித் தகைமைகள்** .- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் இணை கணிதம், பௌதிகவியல் மற்றும் இரசாயன விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி.

மற்றும்

சகல பாடநெறிகளுக்கும் க.பொ.த. (சா.த) பரீட்சையில் மூன்று தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி.

1.2. **வயது**.- 2021.09.30 ஆந் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 25 க்கு மேற்படாதவாறும் இருத்தல் அவசியம்.

அதன் பிரகாரம் 2003.09.30ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.09.30ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்த நாளைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியுண்டு.

**குறிப்பு**: கடல் எந்திரவியல் துறைக்காக தெரிவுசெய்யப்படும் போது வயது 20 வருடங்களுக்குக் குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2. **தேர்ந்தெடுப்பதற்கான வரைகூறு** -

2.1 மேலே 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான ஆகக்குறைந்த தகைமையுடன் 1.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் உள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ் காட்டப்படும் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**எழுத்துமூல பரீட்சை**.-

2.2 அடிப்படை தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள சகல விண்ணப்பதாரிகளும் ஆங்கில மொழியிலான எழுத்துமூல பரீட்சையொன்றுக்குத் தோற்றல் வேண்டும்.

இப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக பல்தேர்வு வினாத்தாள்கள் இரண்டினை உள்ளடக்கும்.

1. பொது விவேகம் - காலம் 01 மணித்தியாலம்-100 புள்ளிகள்
2. தொழில்நுட்ப மற்றும் பொதுத் தேர்வு - காலம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்
   இந்த தொழில்நுட்ப மற்றும் பொதுத் தேர்வுகளின் கீழ் உங்களது அறிவு சிவில் எந்திரவியல், மின் எந்திரவியல், இயந்திர எந்திரவியல், க.பொ.த.(உயர் தர) இணை கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய தலைப்புகளின் கீழ் பரீட்சிக்கப்படுவர்.

2.3 இந்த எழுத்துமூல பரீட்சை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நடைபெறுமென்பதுடன் விண்ணப்பதாரிகளினால் தமது விண்ணப்பத்தில் அண்மையிலுள்ள 02 பரீட்சை நிலையங்களைக் குறிப்பிடல் வேண்டும். (இதன் பிரகாரம் இறுதித் தீர்வு பரீட்சைத் திணைக்களத்தினுடையதாகும்)

| | |
|---|---|
| 01 கொழும்பு | 06 குருநாகல் |
| 02 காலி | 07 யாழ்ப்பாணம் |
| 03 இரத்தினபுரி | 08 மட்டக்களப்பு |
| 04 கண்டி | 09 அநுராதபுரம் |
| 05 பதுளை | |

* (எழுத்துமூல பரீட்சைக்குத் தகுதி பெற்றவர்களின் விபரங்கள் அவரவர்களுக்கு சுமார் இரு கிழமைகளுக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும்)

2.4 **நேர்முகப் பரீட்சை.-**
எழுத்துமூல தகுதிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற தொடரிலக்க அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2.5 **தேர்வு செய்யும் முறை.-**

| | |
|---|---|
| எழுத்துமூல பரீட்சைக்கான சிபார்சு செய்யப்பட்ட புள்ளி அளவு | 60% |
| Z-score பெறுமதிக்காக சிபார்சு செய்யப்பட்ட புள்ளி அளவு | 20% |
| நேர்முகப் பரீட்சைக்காக சிபார்சு செய்யப்பட்ட புள்ளி அளவு | 20% |

நேர்முகப் பரீட்சைக்காக சிபார்சு செய்யப்பட்ட புள்ளி அளவு பின்வருமாறு பெற்றுக் கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| பாட வெளிவாரி செயற்பாடுகளுக்கான புள்ளி அளவு | 10% |
| நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்க முன்னருள்ள ஏற்பாடு மற்றும் அதற்குத் தோற்றுவதற்கான நெறிமுறைகள் சம்பந்தமாக புள்ளி அளவு | 10% |

மேற்குறிப்பிடப்பட்ட நேர்முகப் பரீட்சை சம்பந்தமாக முழு புள்ளி அளவை அடிப்படையாக வைத்து அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்களின் புள்ளி அடிப்படையில் இப்பாடநெறிக்காக 500 பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2.6 தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அனைவரும் அவர்கள் அந்தப் பாடநெறியை பதிவுசெய்வதற்கு முன்னர், தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனையொன்றினை செய்ய வேண்டும். (கடல் எந்திரவியல் துறைக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவர்களுடைய பதிவு இடம்பெற்றதன் பின்னர் மற்றுமொரு விசேட மருத்துவ பரிசோதனையை தமது சொந்த செலவில் செய்ய வேண்டும்.

2.7 பரீட்சார்த்திகள் (ஆண்கள்/பெண்கள்) பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை மண்டப அதிகாரியின் திருப்திக்கேற்றவாறு தமது சுய அடையாளத்தை உறுதிப்படுத்தல் அவசியம். அதற்காக பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(ii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அதே போல் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை நிரூபிப்பதற்காக முகம் மற்றும் இரு காதுகளை மூடாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அதனை மீறுபவர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவுற்று அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரிகளை அறிந்து கொள்ளுதற் பொருட்டு முகம் மற்றும் இரு காதுகள் மூடப்படாமல் காட்சியளித்தல் அவசியம்.

2.8 பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றினை விநியோகிப்பது, அவர் ஆணோ அல்லது பெண்ணோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பாடநெறிக்காக தகுதி பெற்றுள்ளாரென கருதுவதற்கு ஏற்புடைத்தானதல்ல.

3. **விண்ணப்பிக்கும் முறை**.-

3.1 சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை முன்வைக்கும் போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சை மற்றும் நிர்வாக அலுவல்களுக்கான கட்டணமாக ரூபா 3,000.00 செலுத்த வேண்டும். (இக்கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.)

3.2 பணப்பற்றுச்சீட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சரியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(i) கிளை இலக்கம் மற்றும் கணக்கு இலக்கம் - 276-1-001-8-6351396.

(ii) வரவு ஆலோசனை: மக்கள் வங்கி, கட்டுநாயக்க, எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர் நலன்புரி கணக்கு இலக்கம் 276-1-001-8-6351396 க்கு வரவு வைக்கப்படுவதற்காக.

(iii) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்:
* கவனிக்க.- இதனை தீவெங்கிலும் உள்ள எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் வைப்புச் செய்யலாம்.

3.3 விண்ணப்பப் படிவம் மற்றும் நிறுவகம் சம்பந்தமான மேலதிக விபரங்களை www.iet.edu.lk என்ற வளைத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3.4 கொடுப்பணவு செய்யப்படும் வங்கிக் கிளையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரால் உறுதிப்படுத்தப் பட்ட பணப்பற்றுச்சீட்டு, உரிய முறைப்படி நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தோடு (scan) ஸ்கேன் செய்து 2021 மாச்சு 25ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "apply2021@ietonline.edu.lk" என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப் படல் அவசியம். தாமதமாகிக் கிடைக்கின்ற மற்றும் கையளிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.5 அரசாங்க உயர் கல்வி நிறுவனமொன்றில் எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமாவுக்கு சமமான தரத்தினைக் கொண்ட முழுநேர டிப்ளோமா பாடநெறியொன்றினை கற்றுக்கொண்டிருக்கின்றவர்களுக்கும் அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றில் முழுநேர பட்டப்படிப்பு பாடநெறியொன்றினை பயின்று கொண்டிருப்போருக்கும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியாது.

3.6 விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறியத்தரப்படமாட்டாது.

4. **நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் பாடநெறிகள்**:

4.1 சிவில் எந்திரவியல் துறை

1. சிவில்-கட்டட மற்றும் கட்டமைப்பு எந்திரவியல் பாடநெறி
2. சிவில்-பெருவீதி மற்றும் புகையிரத வீதி எந்திரவியல் பாடநெறி
3. சிவில்-நீர் மற்றும் சூழல் எந்திரவியல் பாடநெறி

4.2 மின்சார மற்றும் இலத்திரனியல் எந்திரவியல் துறை

4. மின்சார மற்றும் இலத்திரனியல் -வலை மற்றும் தொடர்பாடல் எந்திரவியல் பாடநெறி
5. மின்சார மற்றும் இலத்திரனியல் - மின்சக்தி எந்திரவியல் பாடநெறி

4.3 இயந்திர எந்திரவியல் துறை

6. இயந்திர - தன்னியக்க அசைவு எந்திரவியல் பாடநெறி
7. இயந்திர - இயந்திர (உற்பத்தி) எந்திரவியல் பாடநெறி
8. இயந்திர - கடல் எந்திரவியல் பாடநெறி
9. இயந்திர - கட்டிட சேவைகள் எந்திரவியல் பாடநெறி

* எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கடல் எந்திரவியல் பாடநெறி, ISO 9001:2015 தகுதிச் சான்றிதழின் கீழ் நடாத்தப்படும்.

* கடல் எந்திரவியல் பாடநெறியானது, சர்வதேச சமுத்திர ஒன்றியத்தின் STCW-95 மற்றும் 7.04 மாதிரி பாடநெறி மற்றும் அதனோடு தொடர்புடைய கடல் எந்திரவியல் செயல்விளைவு மட்டத்தின் அறிவு, புரிந்துணர்வு மற்றும் தொழிற் தேர்ச்சி சம்பந்தமான உரிமைக் கட்டளை சார்ந்த தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே, திட்டமிடப்பட்டுள்ளது.

5. **பயிற்சியளிக்கும் காலம் பற்றிய விபரம்**– இப்பாடநெறிக்கான காலம் நான்கு வருடங்களாகும். 24 மாதங்கள் கோட்பாட்டு வழிமுறை பாடநெறி, 24 மாதங்கள் பிரயோக பயிற்சியுடன் கீழ்வரும் முறைப்படி செயற்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதலாம் கல்வியாண்டு எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் | – 12 மாதங்கள் |
| அடிப்படை கைத்தொழில் பயிற்சி வெளியாளர் பயிற்சி நிறுவகங்களில் | – 12 மாதங்கள் |
| இறுதி கோட்பாட்டு வழிமுறைகள் வேலைத்திட்டம் எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் | – 12 மாதங்கள் |
| இறுதி கைத்தொழில் பயிற்சி வெளியாளர் கைத்தொழில் நிறுவகத்தில் | – 12 மாதங்கள் |

இப்பாடநெறிக்கான கோட்பாட்டு வழிமுறைகள் மற்றும் பாடநெறி பிரயோக செயற்பாடுகள் இதே நிறுவகத்தின் கீழ் பெற்றுத்தரப்படும் என்பதுடன், கைத்தொழில் பயிற்சிகள் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கைத்தொழில் நிறுவகங்களினூடாக பெற்றுத்தரப்படும். பாடநெறி ஆரம்பத்தில் ஆங்கில பாடநெறியொன்று இடம்பெறுவதுடன் அதில் சகல பயிலுநர்களும் கட்டாயமாக பங்குகொள்ள வேண்டும்.

6. **பாடநெறி மொழிமூலம்**.– ஆங்கில மொழியில்.

7. **பயிலுனர் ஒப்பந்தம்**.–

7.1 தெரிவு செய்யப்படும் சகல பயிலுநர்களும் பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி பெறும் நிறுவனம் ஆகிய இரு தரப்பினரிடையே பொறுப்புக்கள் சாட்டப்படும் விசேட பயிலுநர் ஒப்பந்தமொன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

7.2 பயிற்சியின் பின்னர் பயிலுநர்களுக்கு தொழில் பெற்றுத்தருவதற்கு நிறுவகம் பொறுப்பில்லை.

7.3 இப்பாடநெறிக்காக பதிவு செய்யும் சகல மாணவர்களும் முழு பாடநெறி காலத்துக்குள்ளும் சமுகமளிக்கும் வரவு வீதமானது நிறுவகத்தினால் அனுமதிக்கும் அளவுக்குள்ளேயே இருத்தல் அவசியம். அவ்வாறின்றி நடக்கும் போது பரீட்சைக்குத் தோற்ற முடியாது போகும் என்பதுடன் பாடநெறியிலிருந்து விலக்களிக்கப்படவும் நேரிடும்.

8. **பயிலுநர் பதிவு** .–

8.1 பாடநெறிக்கு பதிவு செய்யும் நேரத்தில் திருப்பிச் செலுத்தப்படும் கட்டணமாக ரூபா 5,000.00 வைப்புப் பணமாக செலுத்த வேண்டும். இப் பாடநெறியை செவ்வனே பூரணப்படுத்தியவர்களுக்கு மட்டுமே இந்த வைப்புப் பணத்தைத் திருப்பிப் பெற்றுக் கொள்ள முடியும்.

தெரிவாகும் சகல பயிலுநர்களும் பதிவு செய்யும் நேரத்தில், பதிவுக் கட்டணமாக ரூபா 500.00 உம் மாணவர்களின் கல்வியுடன் தொடர்புடைய மற்றும் வேலைகள் மற்றும் வாசிகசாலை கட்டணம் ஆகியவற்றுக்கு 2,000.00 ரூபாவும் மொத்தமாக ரூபா 2,500.00 திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும், க.பொ.த. (சாதாரண தர) மற்றும் க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளை உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

8.2 சமுர்த்தி மானியம் உரித்துடைய குடும்பத்திலிருந்து வரும் அங்கத்தவராக இருப்பின், அதற்கு உரிய மூலப் பிரதிகளை (சமுர்த்தி அட்டை மற்றும் கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்) கொடுப்பதன் மூலம் திருப்பிச் செலுத்தப்படவுள்ள வைப்புப் பணத்திலிருந்து விலக்குப் பெற முடியும்.

9. **சான்றிதழ் வழங்கல்** – வெற்றிகரமாக கோட்பாடு மற்றும் பிரயோக பயிற்சிகளை முடித்து சித்தி பெறும் பயிலுநர்கள் நிறுவகத்தோடு உள்ள சகல ஒப்பந்தங்களிலிருந்தும் விடுதலையானதன் பின்னர், எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

10. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாக எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகம் பொறுப்புக்கூற மாட்டாது.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் பிரசுரமாகும் இவ் அறிவித்தல்களில் உள்ள மொழிகளுக்கிடையில் ஏதேனும் தொடர்பின்மை அல்லது பொருத்தமின்மைக் காணப்படின் அவ்வாறான சூழ்நிலைகளில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட,
இராஜகிரிய.

FOR OFFICE USE
(Application No.)

FOR OFFICE USE
(Index No.)

**NATIONAL APPRENTICE AND INDUSTRIAL TRAINING AUTHORITY**
**INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY – KATUNAYAKE**

**APPLICATION FOR THE RECRUITMENT OF SPECIAL APPRENTICES IN ENGINEERING FOR NATIONAL DIPLOMA IN ENGINEERING SCIENCES (NDES) COURSE – 2020/2021 BATCH**

❖ Select two centers nearest to you from the exam centres below.

01 Colombo
02 Galle
03 Ratnapura
04 Kandy
05 Badulla
06 Kurunegala
07 Jaffna
08 Batticaloa
09Anuradhapura

| *Preference* | *No. of the exam centre* |
|---|---|
| *1* | |
| *2* | |

1. Name in Full:
   (Fill in block letters)

   (Eg. ARACHCHILAGE SASEN CHAMARA FERNANDO)

2. Name with Initials:
   (Eg. A.S.C. FERNANDO)

3. Address:
   (Fill in block letters)

4. Telephone No. Mobile: Residence :

5. E-mail Address:

6. District:

7. Divisional Secretariat:

8. Grama Niladhari Division: Division Number :

9. Date of Birth:
   (i) Date Month Year
   (ii) Age as at 30/09/2021: Months Years

10. Sex: Male – 0 [ ]
Female – 1 (Write the relevant number inside the cage.)

11. NIC No. [ ]

12. Nationality: [ ]

13. Educational Qualification: Index No. [ ] Year [ ]

(i) G.C.E. (O/L)

| *S.No.* | *Subject* | *Grade* |
|---|---|---|
| 1 | Religion | |
| 2 | First Language | |
| 3 | Second Language (English) | |
| 4 | Science | |
| 5 | Mathematics | |
| 6 | History | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |

Performance in English language at G.C.E. (O/L) Examination : [A] or [B] or [C]

(Tick the relevant box.)

| *Attempt* | *Year* | *Index No.* |
|---|---|---|
| | | |

(ii) Result of G.C.E. (A/L) Examination (Subjects Passed in one sitting)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Year | | | | | |
| Index No. | | | | | |
| Z-Score Marks | | | | | |
| Medium | | | | | |
| Subject | Combined Mathematics | Physics | Chemistry | English | Common General Test marks |
| Grade | | | | | |

(iii) Number of sittings for G.C.E. (A/L) Examination: [ ]

14. Order of preference of fields of specialization: (Mark from 1 to 9 based on order of preference)

| *Serial No.* | *Field* | *Code* | *Preferences* |
|---|---|---|---|
| 1 | Civil - Building & Structural Engineering | CB | |
| 2 | Civil - Highway & Railway Engineering | CH | |
| 3 | Civil - Water & Environmental Engineering | CW | |
| 4 | Electrical – Network & Communication Engineering | EN | |
| 5 | Electrical - Electrical Power Engineering | EP | |
| 6 | Mechanical - Automotive Engineering | MA | |
| 7 | Mechanical - Production Engineering | MP | |
| 8 | Mechanical - Marine Engineering | MM | |
| 9 | Mechanical – Building Services Engineering | MB | |

I do hereby certify that the information furnished above is true and correct and confirm to the qualifications laid in the advertisement and I have not registered for full time Degree or Diploma in a University or any other Government Academic Institutions. I hereby state that I am prepared to accept discontinuance from the training programme without any claim for compensation, if any of the above information is found to be false or inaccurate even after the commencement of the training programme. Further, I do agree to abide by the rules and regulations imposed by the Commissioner General of Examinations on Conducting the Examination and on releasing results.

Date :.......................................

............................................
Signature of Applicant

(Please affix the scanned copy of payment receipt for Rs. 3,000/-)

For office use only

| | |
|---|---|
| Age limit | Within/Exceeded |
| Basic Qualification | Adequate/inadequate |
| Applications | Complete/incomplete |
| Accepted/Rejected<br><br>…………………..<br>Checked by | <br><br>…………………..<br>Approved by |

**NATIONAL APPRENTICE AND INDUSTRIAL TRAINING AUTHORITY**

**INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY – KATUNAYAKE**

**Recruitment of Special Apprentices in Engineering for National Diploma in Engineering Sciences (NDES) course - 2020 / 2021 Batch**

**Instructions for Completing the Application Form**

(1) The application should be in accordance with the Gazette notification and www.iet.edu.lk web site. All other applications will be rejected.

(2) Applications of the applicants, who do not possess the required qualifications, as mentioned in the gazette notification will be rejected.

(3) (a) The applicant should have to pay Rs. 3000/- to any branch of People's Bank and scanned copy of pay-in-slip should be affixed in the space provided in the application.

(b) The Pay-In-Slip should contain the following compulsory information.

(i) Branch Code and Account No: 276-1-001-8-6351396
(ii) Credit Instruction: To the credit of Institute of Engineering Technology Student welfare Account No. 276-1-001-8-6351396 at People's Bank, Katunayake.
(iii) Name & the address of the applicant.

(4) Duly filled application form, should be sent to " apply2021@ietonline.edu.lk" using your permanent e-mail address before 25th March 2021. Late applications will be rejected.

❖ Note: All the future communication will be done with you, through your permanent e-mail address.

(5) Subject for the email should be your NIC number. Ex. Student name A.B.C. Perera
NIC 19971782003
NIC 971782003

Your email subject should be as - NIC 19971782003
NIC 971782003

N.B. : All information asked in the application form should be completed and no blank space should be left. Incomplete applications will be rejected without notice.

02-726

**நிதி அமைச்சு**

இலங்கை விலை மதிப்புத் திணைக்களம்

இலங்கை விலை மதிப்புத் திணைக்களத்தின் வெளிக்கள /அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 இன் II ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

இலங்கை விலை மதிப்புத் திணைக்களத்தின் II ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு 153 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, யூன் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடாத்தப்படும் திகதி உரிய காலத்தில் பத்திரிகை அறிவித்தலின் மூலம் அறியத்தரப்படும். இப் பரீட்சையை பிற்போட அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் பிரதான விலை மதிப்பீட்டாளருக்கு அதிகாரம் உண்டு.

இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய பெண்/ ஆண் இரு பிரிவினரிடமிருந்தும் இப்பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.**தகைமைகள்** .-

I. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆதன முகாமைத்துவம் மற்றும் விலை மதிப்பீடு தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய நில அளவையாளர்களின் ராயல் நிறுவனத்தின் அங்கத்துவத்தைக் கொண்ட பட்டய விலை மதிப்பீட்டாளராக இருத்தல்.

II. **உடற் தகைமைகள்**.- சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

III. **ஏனைய தகைமைகள்**:-

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் ;

(இ) விண்ணப்பதாரி உரிய அனைத்து தகைமைகளையும் 2021, மாச்சு மாதம் 25 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதி பெற்றவராக கருதப்படுவார்.

02 **வயது** :-

I. **குறைந்தபட்ச வயதெல்லை**.- வயது 21 இற்குக் குறையாமலும்

II. **உயர்ந்தபட்ச வயதெல்லை**.- வயது 35 இற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

(இதற்கமைய 2000.03.25ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.03.25 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது.)

**குறிப்பு** .-

I. ஏதேனும் ஒரு சமயப் பிரிவில் மதகுரு பதவியை வகிக்கும் எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

03. **சேவை நிபந்தனைகள்**:

I. **சம்பளம்**.- இப்பதவிக்குரிய ஒருங்கிணைந்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் MN 5 எனும் சம்பள வகுதியில் ரூபா 34,605-10× 660-11× 755-15× 930 -ரூபா 63,460.00 ஆகும்.

II இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

III. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதி முதல் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

IV. நியமனதாரிகள் நாட்டின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கு தகுதியானவரா இல்லையா என்பதனை அறிவதற்கு உடல் ஆரோக்கியப் பரிசோதனை அரச வைத்திய உத்தியோகத்தரால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

V. நியமனதாரிகள் நாட்டின் எந்த பிரதேசத்திலும் கடமையாற்றுவதக்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

VI. அரசாங்க சேவை ஆணைக்குழு இலக்கம்: 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஒழுங்கு விதிகளின் நிபந்தனைகளுக்கும், இவ்வர்த்தமானி பத்திரிகையின் I ஆம் பகுதியின் (IIஅ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவைகளின் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின்பால் அவதானம் செலுத்தப்படும்.

VII. இந் நியமன இலக்கம்: 2142/75 மற்றும் 2019.09.27 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவைக்கான பிரமாணக் குறிப்பில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் படி கட்டுப்படுத்தப்படும்.

04. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அதன்போது, உரிய தகைமைகள் மாத்திரம் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

05. **பரீட்சை நடைமுறை**.- ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எழுத்துமூல வினாப்பத்திரங்கள் இரண்டினைக் (02) கொண்டுள்ளது. அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| பாட இலக்கம் | வினாத்தாளின் பெயர் | காலம் மணி/நிமிடம் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் | அதிகபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| 01 | விடய அறிவு வினாப்பத்திரம் I ஆம் பகுதி | 30 நிமிடங்கள் | 40 | 100 |
| 02 | விடய அறிவு வினாப்பத்திரம் II ஆம் பகுதி | 1 1/2 மணித்தியாலம் | 40 | 100 |

(அ) **விடய அறிவு வினாப் பத்திரம் I ஆம் பகுதி** .- ஆதனக் கட்டுப்பாடு மற்றும் விலைமதிப்பீட்டுக் கலை தொடர்பிலான விஞ்ஞானமானி பட்டப் படிப்புக்காக கற்பிக்கப்படும் பாடங்களுக்கு ஏற்புடையவாறு 25 வினாக்களுக்கு மேற்படாத வகையிலான பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஆ) **விடய அறிவு வினாப் பத்திரம் II ஆம் பகுதி**.- ஆதனக் கட்டுப்பாடு மற்றும் விலைமதிப்பீட்டுக் கலை தொடர்பிலான விஞ்ஞானமானி பட்டப் படிப்புக்காக கற்கும் பாடத் துறைகளுக்கு ஏற்புடைய தலைப்புக்களை உள்ளடக்கி தயாரிக்கப்படும் கட்டுரைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வடிவிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.

**குறிப்பு** .- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சைக்குக் கோரும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(i) தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) பரீட்சையில் தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். ஆனால், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறுவதானது பரீட்சைக்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டார்.

(iii) மதிப்பீட்டு முறை: போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டு முதன்மைப் பட்டியலொன்று தயாரிக்கப்படும். அவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும்

பரீட்சார்த்தி முதல் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் விகிதத்துக்கு ஏற்ப பரீட்சார்த்திகளின் எண்ணிக்கைக்கு சமனான பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

06. **தெரிவு செய்யப்படும் அடிப்படை.-** எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்ற பரீட்சார்த்திகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு வெற்றிடங்களின் எண்ணிக்கையின் கீழ் நியமனங்கள் வழங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(1) **பெறுபேறுகளை வெளியிடல்.-** எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்து நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எழுத்துப் பரீட்சை புள்ளிகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிரதான விலை மதிப்பீட்டாளருக்கு அனுப்பிவைக்கப்படும். அத்தோடு, பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்தி களுக்கான பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு அல்லது தபால் மூலம் அறியத்தரப்படும்.

07. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

08. **விண்ணப்பிக்கும் முறை.-**

**மாதிரி விண்ணப்பப்படிவம்.-**

(i) இவ்வறிவித்தலின் இறுதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளால் இம்மாதிரி விண்ணப்பப்படிவத்தை தாம் தோற்றவிருக்கும் மொழி மூலத்திலே தயாரித்தல் வேண்டும் என்பதோடு, அதனை சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் உள்ள சகல பிரிவுகளையும் அறிவுறுத்தலின் படி விண்ணப்பதாரியினால் நிரப்புதல் வேண்டும் என்பதோடு. தமக்கு உரித்தற்ற பிரிவுகள் இருப்பின் அவற்றை "ஏற்புடையதன்று" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் இடைவெளிகளை நிரப்பாது விடுவது அது நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் என்பதனை நினைவில் வைத்துக்கொள்ளவும். ( மாதிரி விண்ணப்பத்தை 01 முதல் 05 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், 06 முதல் 11 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும் எஞ்சியதை 3 ஆம் பக்கத்திலும் அமையுமாறு A4 அளவுடைய கடதாசியில் தயாரித்துக் கொள்ளவும்.) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி.-**

(ii) விண்ணப்பத்தினை 2021, மார்ச் மாதம் 25 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன மற்றும் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, தப.பெ. 1503, பெலவத்த, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அத்திகதியின் பின்னர் கிடைக்கபெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "II ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" என்று பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**பரீட்சைக் கட்டணம் .-**

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இன் கீழ் எந்தவொரு தபாலகம்/ உபதபாலகங்களில் மாத்திரம் பரீட்சைக் கட்டணமாக ரூபா 750.00 இனைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்பட மாட்டாது. செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாகும்.

**தற்போது சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள்.-**

(iv) அரச திணைக்களம்/ சபை/ கூட்டுத்தாபனங்களில் தற்சமயம் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை சேவையாற்றும் திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். 2021, மாச்சு மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கும் வகையில் அனுப்புமாறு கோருவதோடு, தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்களிடம் நேர காலத்தோடு சமர்ப்பிக்குமாறும் விண்ணப்பதாரிகளிடம் கோரப்படுகின்றது. பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெயருக்கு அல்லது அத்திணைக்களத்தின் மற்றொரு உத்தியோகத்தரின் தனிப்பட்ட பெயருக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் கூடாது.

திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெற்றால் நிராகரிக்கப்படும்.தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களில் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் போது குறித்த திணைக்கள /நிறுவனத் தலைவரின் ஒப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை காணப்படாதுவிடின் அவ்விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்களை சான்றுப்படுத்தல்.-**

(v) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை குறித்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

09. **பரீட்சை அனுமதிப்பத்திரம்.-**

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல், ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தலுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாது விடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் மேற்படி விபரங்களுடன் பரீட்சை பிரவேசப் பத்திர நிழற் பிரதியொன்றை உடனடியாக அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

**பரீட்சை அனுமதிப் பத்திரத்தை உறுதிப்படுத்தல்:**

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை குறித்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் கையொப்பம் அவற்றினை சான்றுப்படுத்துவதற்கு அதிகாரம் உள்ள ஒருவரால் உறுதிப்படுத்தல் வேண்டும். அவர்கள், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரச பாடசாலையின் அதிபர், கடற்படை, வான்படை மற்றும் இராணுவத்தில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர், அரசின் நிரந்தர சேவையில் பதவிநிலை உத்தியோகத்தர், பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது வேறு சமய புனிதஸ்தளத்திற்கு பொறுப்பாக உள்ள அல்லது மதகுருவாக கருதப்படும் நிலை வகிக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும்.

**பரீட்சைக்கு தோற்றுதல்** .-

(iii) பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதோடு, விதிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(iv) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், பெறுபேறுகளை வெளியிடுவது குறித்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். அச் சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

**குறிப்பு**.- பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படுதல் பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படலாகாது.

10. **ஆளடையாளம்** .- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ( PassPort) ;

(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேற்படி ஆவணங்களில் ஏதேனுமொன்றை சமர்ப்பிக்க தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்பட மாட்டாது.

11. **போலியான தகவல்களை வழங்குதல்** .- இப்பரீட்சையின் விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அதில் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது அதன்பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்பட முடியும். பரீட்சார்த்தியினால் வேண்டுமென்றே பிழையான தகவலொன்றை வழங்கியதாக அல்லது ஏதேனும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருந்தார் அல்லது பரீட்சைக்கு தோற்ற தகுதியற்றவராயிருந்தார் என்பதை சேவைக் காலத்தினுள், எச்சந்தர்ப்பத்திலும் நிரூபிக்கப்பட்டால் அவரை உடனடியாக சேவையிலிருந்து நீக்குவதற்கு காரணமாக அமையும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை உரிய வகையில் வழங்காத விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்படும்.

13. இவ்விதிகளில் குறிப்பிடப்படாத ஏற்புடைய வேறு ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பிரதான விலை மதிப்பீட்டாளரின் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படும்.

14. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல அறிவித்தல்களுக்கிடையே ஏதேனும் இணக்கமின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலே வலுவானதாகும்.

பி.டீ.டீ.எஸ். முத்துகுமாரண,
அரசின் பிரதான விலை மதிப்பீட்டாளர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விலை மதிப்புத்திணைக்களத்தின் வெளிக்கள /அலுவலக உத்தியோகத்தர் வகுதி - 2 இன் II ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

**க.வே.** விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விலை மதிப்பீட்டாளர் சேவையின் வெளிக்கள /அலுவலக உத்தியோகத்தர் 02 ஆம் வகுதியின் II ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021" எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு, விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன மற்றும் ஒழுங்கமைப்புக்கிளை, தபா.பெ. 1503, பெலவத்த, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

[ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(1) விண்ணப்பதாரியின் பெயர் :

முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : .....................................................................
.....................................................................

ஆங்கில கெப்பிடல் எழுத்தில் ( உதா : SILVA, A.B.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : .....................................................................
.....................................................................

1.3 முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) : .....................................................................
.....................................................................

(2) தனிப்பட்ட முகவரி (சிங்களம் /தமிழ்) :- .....................................................................
.....................................................................

(முகவரி மாறுபட்டால் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : .....................................................................
.....................................................................

(3) பெண் /ஆண் பால்நிலை : (ஆண் - 0 , பெண்- 1) [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(4) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

(5) கையடக்கத் தொலைபேசி இலக்கம்: [ | | | | | | | | | ]

(6) விவாகமானவர் /விவாகமாகாதவர் :(விவாகமானவர் -1, விவாகமாகாதவர் - 2 ) [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(7) இனம் (சிங்களம் - 1, தமிழ் - 2, இந்திய தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(8) பிறந்த திகதி: ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

(9) நீர் வம்சாவளி இலங்கைக் குடிமகனா? அல்லதுபதிவின் மூலமா? எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
(பதிவின் மூலமாக இருந்தால் விபரங்களைக் குறிப்பிடவும்)

(10) கல்வி /தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/பட்டம் | நடைமுறைப்படுத்தப்படும் திகதி | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(11) தற்போதைய தொழில் மற்றும் மேலே ஏதேனும் ஒரு பதவி வகித்திருப்பின் அது பற்றிய விபரம் :

| பதவி | முதல் | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |

(12) நீங்கள் அரச பதவியை வகித்து அதிலிருந்து பதவி நீக்கப்பட்டள்ளீரா ?
(அவ்வாறாயின் அவை தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்)

(13) உங்களுக்கு எதிராக ( தற்போது அரச சேவையில் ஈடுபடுவதாயின்) திணைக்கள ஒழுக்காற்று விசாரணைகள் ஏதும் உள்ளதா?

(14) நீங்கள் ஏதேனும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

(15) பரீட்சைக் கட்டணம் ( பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இத்துடன் இணைக்கவும்)

i. பணம் செலுத்திய தபாலகம் /உபதபாலகம் : ....................................................................
ii. செலுத்திய தொகை :..........................................................
iii. செலுத்திய திகதி : ......................................
iv. பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................

பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி கழராதவாறு இங்கே ஒட்டவும்.
(நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளவும்)

(16) **விண்ணப்பதாரியின் உறுதியுரை** : இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும், சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராகவும், நியமனம் கிடைத்த பின் தெரியவந்தால் சகல உரிமைகளும் இன்றி, நான் பதவியை விட்டு விலக்கப்படுவேன் எனவும் அறிந்து வைத்துள்ளேன்.

மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

திகதி : .................................

.....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் (ஏற்புடையதற்ற சொற்களை நீக்கி விடவும்) :**

இவ் விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற ..................................................................................( முழுப் பெயர்) திரு. /திருமதி /செல்வி என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும், அவர் 2021............................மாதம் .......... ஆந் திகதி என் முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டதாகவும் சான்றுப்படுத்துகின்றேன்.

..................................................,
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின்
கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் :- ..........................................................................................................
பதவி : .........................................................................................................................
முகவரி : .............................................................................................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை)
திகதி : ...........................

**விண்ணப்பதாரி அரசாங்க /மாகாண அரசாங்க சேவை /அரச கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றுவதாயின் நிறுவனத் தலைவரின் பரிந்துரை :**

இவ் விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற .......................................................................................................... திரு. /திருமதி /செல்வி ஆகிய நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் .................................................... (அமைச்சில் / திணைக்களத்தில் / அரச கூட்டுத்தாபனத்தில்) சேவையில் ஈடுபடுவதாகவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் எதுவும் இல்லை எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும், அவர் ............................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன். (மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.)

அவர் இலங்கை விலை மதிப்பீட்டாளர் திணைக்களத்தின் வெளிக்கள /அலுவலக உத்தியோகத்தர் 02 ஆம் வகுதியின் II ஆம் வகுப்பின் II ஆந் தரத்தின் உதவி விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு நியமனம் பெற்றால் இத்திணைக்களத்தின் / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கின்றேன்.

..................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

நிறுவனத் தலைவரின் முழுப் பெயர் :- .......................................................................................................................
பதவி : .........................................................................................................................
அலுவலக முகவரி :
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை)
திகதி : ...........................

*02-732*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.